**தலைப்பு 143 - பாராளுமன்ற அலுவல்கள் அமைச்சு தொடர்பான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை – 2014 ஆம் ஆண்டு**

இந்த அறிக்கையின் 1 ஆம் பந்தி முதல் 2 ஆம் பந்தி வரை அமைச்சின் கணக்குகள் தொடர்பான பொதுத் தகவல்கள் உள்ளடக்கப்பட்டிருந்ததுடன் 3 ஆம் பந்தி முதல் தலைப்பிற்குரிய கணக்காய்வு அவதானிப்புக்கள் காண்பிக்கப்படுகின்றன.

**1.1 கணக்காய்வின் நோக்கெல்லை**

பாராளுமன்ற அலுவல்கள் அமைச்சின் 2014 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதி அறிக்கைகள், இணக்கக் கூற்றுக்கள், ஏடுகள், பதிவேடுகள், ஏனைய அறிக்கைகள் என்பவற்றினை உள்ளடக்கிய ஒதுக்கீட்டுக் கணக்கு இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையில் உள்ளடக்கப்பட்ட ஏற்பாடுகளின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. மீளாய்வாண்டிற்கான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2015 யூன் 01 ஆந் திகதி அமைச்சின் செயலாளருக்கு வழங்கப்பட்டது. கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் மீதான கணக்காய்வு அவதானிப்புக்கள், கருத்துரைகள், காண்புகள் என்பன கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் மீதான மீளாய்வினதும் கொடுக்கல் வாங்கல் மாதிரிகளின் செவ்வை பார்த்தலினதும் அடிப்படையில் எழுந்தனவாகும். அவ்வாறான மீளாய்வினதும் செவ்வை பார்த்தலினதும் நோக்கெல்லையும் அளவும் எனக்கு கிடைக்கப் பெற்ற பதவியணியினர், ஏனைய வளங்கள், நேரம் என்பவற்றின் வரையறைக்குட்பட்டு இயலுமான அளவு விரிவானதொரு கணக்காய்வினை மேற்கொள்ளக்கூடிய வகையில் தயாரிக்கப்பட்டிருந்தன.

**1.2 கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பு**

ஒதுக்கீட்டுக் கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்களை இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 148, 149, 150 மற்றும் 152 ஆம் உறுப்புரைகள், ஏனைய நியதிச்சட்ட ஏற்பாடுகள், அரசாங்க நிதி மற்றும் நிர்வாக ஒழுங்குவிதிகள் என்பவற்றிற்கு இணங்க பேணுதல், தயாரித்தல், நியாயமாகச் சமர்ப்பித்தல் என்பன பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாகும். மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயபூர்வமாகச் சமர்ப்பித்தல் தொடர்பான உள்ளகக் கட்டுப்பாட்டினைத் திட்டமிடல், அமுல்படுத்துதல், பேணுதல் என்பன இந்த பொறுப்பில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

**2. கணக்குகள்**

**2.1 ஒதுக்கீட்டுக் கணக்கு**

**(அ) மொத்த ஏற்பாடு மற்றும் செலவினம்**

அமைச்சிற்காக ஏற்பாடு செய்யப்பட்டிருந்த மொத்த தேறிய நிதி ஏற்பாடு ரூபா 451 மில்லியனாக ஆக இருந்ததுடன் மீளாய்வாண்டின் இறுதிவரை இதில் ரூபா 428 மில்லியன் பயன்படுத்தப்பட்டிருந்தது. அதற்கிணங்க அமைச்சின் தேறிய நிதி ஏற்பாடுகளிலிருந்தான சேமிப்புக்கள் ரூபா 23 மில்லியன் அதாவது 5 சதவீத நிதிஏற்பாடு சேமிக்கப்பட்டிருந்தது. விபரம் கீழே தரப்பட்டுள்ளது.

| தலைப்பு | 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறு | | | சேமிப்பு தேறிய ஏற்பாட்டின் சதவீதமாக |
|---|---|---|---|---|
| | தேறிய நிதியேற்பாடு | பயன்பாடு | சேமிப்புக்கள் | |
| | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | |
| மீண்டு வருபவை | 406.38 | 406.24 | 0.14 | 0.03 |
| மூலதனம் | 44.60 | 22.18 | 22.42 | 50.27 |
| மொத்தம் | 450.98 | 428.42 | 22.56 | 5.00 |

## 2.2 முற்பணக் கணக்கு

### 2.2.1 அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கு

**பாராளுமன்றத்தினால் விதிக்கப்பட்டிருந்த எல்லைகள்**

அமைச்சிற்குரிய அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கு தொடர்பாக பாராளுமன்றத்தினால் விதிக்கப்பட்ட எல்லைகள் மற்றும் உள்ளபடியான பெறுமதிகள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

| விடய இல. | செலவினம் | | பெறுவனவு | | வரவு மீதி | |
|---|---|---|---|---|---|---|
| | அதிகூடிய எல்லை | உள்ளபடியானவை | ஆகக் குறைந்த எல்லை | உள்ளபடியானவை | அதிகூடிய எல்லை | உள்ளபடியானவை |
| | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் |
| 14301 | 4.00 | 3.21 | 2.30 | 2.65 | 20.00 | 8.10 |

## 2.3 பொது வைப்புக் கணக்கு

அமைச்சின் 2014 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு வைப்புக் கணக்கு மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 0.95 மில்லியன் ஆகும்.

## 2.4 கணக்காய்வு அவதானிப்புக்கள்

2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி அறிக்கைகள் மற்றும் ஏடுகளின் பிரகாரம் பாராளுமன்ற அலுவல்கள் அமைச்சின் ஒதுக்கீட்டுக் கணக்கு மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள் 1.1 ஆம் பந்தியில் காண்பிக்கப்பட்டதன் பிரகாரம் முகாமைத்துவக் கணக்காய்வு அறிக்கையில் குறிப்பிடப்பட்ட அவதானிப்புக்களின் கீழ் திருப்திகரமாகத் தயாரிக்கப்பட்டுள்ளன. அந்த முகாமைத்துவக் கணக்காய்வு அறிக்கையில் உள்ளடக்கப்பட்ட அவதானிப்புக்களில் பொருண்மையானதும் முக்கியமானதுமான அவதானிப்புக்கள் 3 ஆம் பந்தியில் காண்பிக்கப்பட்டுள்ளன.

## 3. தலைப்பு 143 - பாராளுமன்ற அலுவல்கள் அமைச்சு

### 3.1 புத்தகங்கள் மற்றும் பதிவேடுகள் பேணப்படாமை

அமைச்சால் 2002 நவம்பர் 28 ஆம் திகதிய ஐஏஜ/2002/02 ஆம் இலக்க திறைசேரிச் சுற்றறிக்கையின் பிரகாரம் கணனி, கணனி உப பாகங்கள் மற்றும் மென்பொருள் தொடர்பாக நிலையான சொத்துப் பதிவேடொன்று பேணப்பட்டிருக்கவில்லை.

### 3.2 ஒதுக்கீட்டுக் கணக்கு

#### 3.2.1 பாதீட்டு முரண்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 02 செலவின விடயங்களுக்காக ஒதுக்கப்பட்ட ரூபா 200,000 மொத்தத் தேறிய நிதி ஏற்பாடும் சேமிக்கப்பட்டிருந்தது.

(ஆ) 08 செலவின விடயங்களுக்காக மிகையான நிதியேற்பாடு ஒதுக்கப்பட்டமையின் காரணமாக நிதியேற்பாட்டைப் பயன்படுத்தியதன் பின்னர் சேமிப்பு அந்த செலவின விடயங்களுக்குரிய தேறிய ஏற்பாட்டில் 10 சதவீதத்திற்கும் 98 சதவீதத்திற்கும் இடையிலான வீச்சினைக் கொண்டிருந்தது.

### 3.3 அரச உத்தியோகத்தர்களின் முற்பணக் கணக்குகள் தொடர்பான இணக்கக்கூற்றுக்கள்

விடய இல. 14301 கொண்ட அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்குகள் தொடர்பான 2014 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறான இணக்கக்கூற்றுக்கள் தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட தெரிவுப் பரிசோதனையின் போது பின்வரும் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

(அ) 1994 ஆகஸ்ட் 10 ஆந் திகதிய 96 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையில் குறிப்பிடப்பட்ட ஏற்பாடுகளின் படி இணக்கக்கூற்றுக்கள் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) 2004 ஒக்தோபர் 11 ஆந் திகதிய 118 ஆம் இலக்க தேசிய பாதீட்டுச் சுற்றறிக்கையின் 1.1.6 ஆம் பந்தியின் பிரகாரம் அமைச்சினால் 2014 ஆகஸ்ட் மாதத்தின் போது இடமாற்றம் பெற்றுச் சென்ற பெண் உத்தியோகத்தரின் கடன் மீதியை மாதாந்த கணக்குப் பொழிப்பின் மூலம் அறவிடுவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) இடமாற்றம் பெற்றுச் சென்ற உத்தியோகத்தர்களினதும் சேவையைப் பூர்த்தி செய்த உத்தியோகத்தர்களினதும் கடன் மீதிகள், அமைச்சில் சேவையில் ஈடுபட்டுள்ள உத்தியோகத்தர்களின் கடன் மீதிப் பட்டோலையில் உள்ளடக்கப்பட்டிருந்தது.

### 3.4 தீர்க்கப்படாத பொறுப்புக்கள்

2014 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு அமைச்சினால் தீர்க்கப்படாத பொறுப்புக்களின் கூட்டுத்தொகை ரூபா 13,940,741 ஆக இருந்தது.

## 3.5 இணக்கமின்மைகள்

**சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் முதலியவற்றுடனான இணக்கமின்மை**

தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனையின் போது அவதானிக்கப்பட்ட சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் என்பவற்றிலுள்ள ஏற்பாடுகளுடனான இணக்கமின்மைச் சந்தர்ப்பங்கள் பகுப்பாய்வு செய்து கீழே தரப்பட்டுள்ளன.

| **சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் என்பவற்றுடனான தொடர்பு** | | **பெறுமதி** | **இணக்கமின்மை** |
|---|---|---|---|
| | | ரூபா | |
| இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப் பிரமாணக் கோவை | | | |
| (i) | நிதிப்பிரமாணம் 94(1) | 13,389,926 | 05 செலவின விடயங்களுக்காக ஒதுக்கப்பட்ட நிதியேற்பாட்டைப் பயன்படுத்தியதன் பின்னர் சேமிப்பை விஞ்சி பொறுப்புக்கள் ஏற்படுத்தப்பட்டிருந்தன. |
| (ii) | நிதிப்பிரமாணம் 396(ஈ) | 438,842 | வழங்கப்பட்டிருந்தும் கொடுப்பனவிற்காக வங்கிக்குச் சமர்ப்பிக்கப்படாத காலாவதியான ரூபா 438,842 பெறுமதியான 16 காசோலைகள் தொடர்பில் நிதிப்பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்க வில்லை. |

## 3.6 முறையற்ற கொடுக்கல் வாங்கல்கள்

அமைச்சினால் மேற்கொள்ளப்பட்ட சில கொடுக்கல் வாங்கல்கள் முறையற்றதாக இருந்தன. அவதானிக்கப்பட்ட அவ்வாறான சில சந்தர்ப்பங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

(அ) அரசாங்க கொள்வனவு வழிகாட்டி நடைமுறைகளைப் பின்பற்றாமை

மீளாய்வாண்டின் போது அமைச்சினால் ரூபா 461,250 தொகை செலவில் 03 கணனிகள் கொள்வனவு செய்யப்பட்டிருந்தன. அது தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன

(i) கொள்வனவு செய்யப்பட்ட கணனிகள் நிறம் மங்கியும் துருப்பிடித்தும் இருந்தன. அக் கணனிகளுக்கு கொடுப்பனவு செய்வதற்காக அங்கீகரித்த உத்தியோகத்தர் தொடர்பாக எவ்வித ஒழுக்காற்று நடவடிக்கையும்

எடுக்கப்பட்டிருக்கவில்லை. அவ்வாறு பழுதடைந்த கணனிகளை வழங்கிய நிறுவனத்தை கறுப்புப் பட்டியலில் இட்டு அரசாங்க கொள்வனவு வழிகாட்டியின் 1.2.1 இன் (இ) வழிகாட்டியின் படி தகைமையுடைய ஆர்வம் காட்டுகின்ற தரப்பினருக்கு பங்குபற்றுவதற்காக நியாயமான, சமமான மற்றும் உச்ச சந்தர்ப்பங்களை வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்காது பழுதடைந்த கணனிகளை மீளக் கையளித்து மீளவும் அந்த நிறுவனத்திலிருந்தே கணனிகள் பெறப்பட்டிருந்தன.

(ii) அரசாங்க கொள்வனவு வழிகாட்டிக் கோவையின் 8.12.3 (அ) மற்றும் (ஆ) வழிகாட்டியின் பிரகாரம் வழங்கப்படுகின்ற பொருட்கள், பொருட்களைக் கையேற்கும் உத்தியோகத்தரால் மாதிரிகளுக்கும் ஏனைய உடன்பட்ட நியமங்களுக்கும் இணங்கியிருந்தமையை உறுதிப்படுத்தல், வழிகாட்டிக் கோவையின் 8.11.6 (அ) வழிகாட்டியின் பிரகாரம் பெறுமதி ரூபா 5 மில்லியனுக்கு குறைவான ஒப்பந்தங்களுக்காக புறக்கணித்துள்ள வழங்குனர்கள் தொடர்பாக திணைக்களத்தின் தரவுத் தளமொன்று கொள்வனவு நிறுவனத்தினால் பேணப்பட வேண்டியிருந்த போதிலும் மேற்கூறப்பட்ட கணனிகளைக் கையேற்கும் போதும் மீளக்கொள்வனவு செய்யும் போதும் அவ்வாறு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) இரட்டைக் கொடுப்பனவு

மொனராகலை இடர் முகாமைத்துவ நிலையத்தில் சேவையாற்றுகின்ற உத்தியோகத்தரொருவர் பாராளுமன்ற அலுவல்கள் அமைச்சரின் பதவியணியில் முகாமைத்துவ உதவியாளர் பதவிக்கு நியமிக்கப்பட்டு 2010 ஏப்ரல் 27 ஆந் திகதி முதல் 2014 மே 31 ஆந் திகதி வரை ரூபா 1,008,307 தொகை சம்பளம் செலுத்தப்பட்டிருந்ததுடன் அந்தக் காலப்பகுதிக்காக மொனராகலை இடர் முகாமைத்துவ நிலையத்திலும் சம்பளம் செலுத்தப்பட்டிருந்தது.

## 3.7 மனித வள முகாமைத்துவம்

**அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினரும் உள்ளபடியான பதவியணியினரும்**

2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறான பதவியணியினர் தொடர்பான நிலைமை பின்வருமாறாகும்.

| | ஊழியர் வகை | அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் | உள்ளபடியான பதவியணியினர் | வெற்றிடங்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|
| (i) | சிரேஷ்ட நிலை | 08 | 06 | 02 |
| (ii) | மூன்றாம் நிலை | 03 | - | 03 |
| (iii) | இரண்டாம் நிலை | 37 | 29 | 08 |
| (iv) | ஆரம்ப நிலை | 19 | 16 | 03 |
| | மொத்தம் | 67 | 51 | 16 |

மீளாய்வாண்டின் இறுதி வரையில் 16 வெற்றிடங்களை நிரப்புவதற்கு அமைச்சு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.